ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2170/3 - 2020 අප්‍රේල් මස 08 වැනි බදාදා - 2020.04.08
2170/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய 2157/43 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதி தாபிக்கப்பட்ட "இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குறுத்தப்பட்ட நிதிக் கம்பனியான ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் (ஈரிஜ) தொடர்பில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பிழையான செயல்கள், ஒழுங்கீனங்கள் மற்றும் முறைக்கேடுகள் பற்றிப் புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடுவதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்" தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய 2020, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி முடிவுறும் மூன்று மாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு 2020, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து ஆறு மாதங்களினால், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, ஏப்பிறல் 08.

1A - G 32215 — 32 (2020/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.